1st November 1962]

Palmgur federation for Kanyakumari

*1044 *Q.*—SRI M. WILLIAM: Will the Hon. the Minister for Finance be pleased to state whether a Palm Gur Federation for the Kanyakumari district has been registered?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: The District Palm Jaggery Marketing Federation for the Kanyakumari district has been registered on 30th November 1961.

Isum rights

* 1045 *Q.*—SRI G. RAJARAM: Will the Hon. the Minister for Works be pleased to state whether "Isum rights" of Village Munsifs are still in existence?

THE HON. SRI V. RAMAIAH: No, Sir. Isum rights do not exist now consequent on the judgment of the Supreme Court of India holding the hereditary a principle of appointment of village officers as *ultra vires*.

திரு. கோ. ராஜாராம்: இசும் உரிமைகள் எடுக்கப்பட்டதால் வேறு என்ன தகுதி முறையில் உத்தியோகம் வழங்கப்படுகிறது? ஏற்கனவே இசும் உரிமைகள் பெற்றவர்களிடையே இந்தத் தகுதி இருந்திருந்தால் இந்தச் சலுகை கொடுக்கப்படுகிறதா?

கனம் திரு. வெ. ராமையா: இவையெல்லாம் நியமனம் செய்யப் படும்போது மற்றவர்களுக்கு என்ன என்ன விதிகள் பின்பற்றப் படுகின்றனவோ அந்த அந்த விதிகள், வசதிகள் எல்லாம் கொடுக்கப்படும்.

திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார்: பாம்பரை பாத்யதையை எடுத்துவிட்டதால் இப்போது எப்படி நியமனம் செய்யப் படுகிறது?

கனம் திரு. வெ. ராமையா: தகுதி பார்த்துத்தான் நியமனம் செய்யப்படுகிறது.

திரு. எ. ஆறுமுகம்: கிராம முன்சீப் வேலைகளுக்குப் பெண்கள் நியமிக்கப்படுவார்களா?

கனம் திரு. வெ. ராமையா: உத்தியோகத்திற்குத் தகுதியிருந் கவனிக்கப்படும்.

மறுதையாறு திட்டம்

* 1046 கேள்வி.—திரு. சா. ராமசாமி: கனம் பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) உடையார்பாளையம் வட்டத்தில் குணமங்கலம் அருகே மருதை ஆற்றில் அணைக் கட்டும் திட்டம் எந்த நிலையிலிருக்கிறது?